# ஒன்றாய் வாழ்வு நோக்கி



## ஒன்றாய் வாழ்வு நோக்கி

உலகத் திருச்சபை மன்றத்தின். உலகத் திருத்தூது நற்செய்திப்பணி ஆணைக்குழுவினால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆவணத்தின் தலைப்பே இது. இது ஒரு முக்கியமான ஆவணம் என்பதோடு நற்செய்திப்பணி பற்றிய பல உபயோகமான பார்வைகளை இது உலகெங்கும் உள்ள திருச்சபைகளுக்கு தருகின்றது.

2014ம் ஆண்டின் மறைமாவட்ட பேராயர் உரையின்போது பேராயர் மறைமாவட்டம் எங்கனும் இவ் ஆவணம் கற்கைக்கும் செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், குறிப்பாக பிரதேச மறைமாவட்டக் குழுக்களில் இது பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கின்றார்.

இந்தக் கையேடு அந்த ஆவணத்தின் முக்கியமான கருத்துக்களையும் அதன் விளக்கங்களையும் இலங்கையில் உள்ள எமக்குத் தர முற்படுகின்றது.

அந்த ஆவணத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் தடித்த எழுத்துக்களால் தரப்பட்டுள்ளன.

1. <u>நற்செய்திப்பணியின் முக்கியத்துவம்</u>

**எரிவதால் தீ இருப்பதுபோல் தூதுப்பணியால் தான் திருச்சபை வாழ்கின்றது.**

**அது தூதுப்பணியில் ஈடுபடவில்லையென்றால் அது திருச்சபையாய் இருக்க முடியாது (57வது அம்சம்)**

திருத்தூதும் நற்செய்திப்பணியும் திருச்சபையின் மேலதிகத் தெரிவுகள் அல்ல. நாம் இந்த செயற்பாட்டில் ஈடுபடாதபோது

ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவும் உதவவும் வாழும் ஒரு தனியார் குழு, சங்கம், போலத்தான் நாமிருப்போம்.

இயேசு எதைச் செய்தாரோ அதைச் செய்வதே திருத்தூது. "என் தந்தை என்னை அனுப்பினது போல் நான் உங்களை அனுப்புகின்றேன்".

நற்செய்தி அறிவிப்பு என்பது நற்செய்தியை பேசும், எழுதும் வார்த்தைகள் மூலமும், செயல்கள் மூலமும் மற்றும் வாழ்க்கை முறை மூலமும் பறைசாற்றுதலாகும். இயேசு இந்த மூன்று வழிகள் வழியாய்த்தான் தமது பணியை விளக்கினார். நாம் செய்ய வேண்டியதும் அதுவே.

கலந்துரையாடவும்

“இயேசுவினதும், முதல் திருத்தூதுவர்களினதும் தூதுப்பணி கடவுளாட்சியை பிரசங்கித்தலே”. இதை ஆமோதிக்கின்றீர்களா?

‘கடவுளின் ஆட்சி’ என்பது எதைக் குறிக்கின்றது? எமது திருச்சபை, எமது திருப்பங்கு இயேசு செய்ததைச் செய்கின்றதா?

எமது திருச்சபை/திருப்பங்கு இயேசு செய்ததைச் செய்வதற்கான ஒரு செயற்திட்டத்தை முன்வையுங்கள்.

2. <u>எமது உலகம்</u>

அனைத்து கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும், திருச்சபை பங்குகளும் மீட்பின் நற்செய்தியை துடிப்போடு அறிவிக்கும் நற்தூதுவர்களாய் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். நற்செய்தி அறிவிப்பு என்பது நாம் துணிவுடன் அதேவேளை தாழ்மையுடன் எமது விசுவாசத்தை பிறருடன் பகிர்ந்துகொள்ளும் செயலாகும். உண்மையான விசுவாசத்தின் தவிர்க்க முடியா கனி அதுவாகும். எனவே ஒவ்வொரு தலைமுறையின் போதும் திருச்சபை கடவுளின் அன்பை இந்த உலகிற்கு அறிவிப்பதற்காய்த் தன்னை நற்செய்திபணிக்கென்று அர்ப்பணிக்க வேண்டும். தனிநபர் மையமான, இறைசார்பற்ற, பொருள் மையமான தலைமுறையினருக்கு கடவுளின் அன்பையும் நீதியையும் நாம் எப்படி அறிவிக்கப் போகின்றோம்? (அம்சம் 8)

எமது நாட்டில் நாம் நற்செய்தியின் அறிவிப்பாளர்களாக எவ்வாறு இயங்க முடியும்?

கலந்துரையாடுங்கள்

“பிறசமய நம்பிக்கைகளைப் பின்பற்றும் எமது அயலவர்களோடு ஏற்கனவே இயேசு பிரசன்னமாயிருக்கிறார்” என்ற கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? அவர்கள் இயேசுவை இனம்கண்டுகொள்ள நாம் என்ன கூறலாம்? எப்படி உதவலாம்?

நமது சமுதாயத்தின் முக்கிய பண்புகள் எவை? எமது சமுதாயம் தனிநபர் மையமான, இறைசார்பற்ற, பொருள்மையமான சமுதாயம் என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?

சமுதாயத்தின் இப்போக்கினைத் தடுத்து நிறுத்த நாம் எப்படி போராட முடியும்? ஒற்றுமையாய், ஒருடலாய், ஆன்மீக விழுமியங்களை வாழும், கண்காணா மெய்ப்பொருளுக்கு சாட்சிகளாய், நல் உதாரணமாய் நாம் வாழமுடியுமா?

3. <u>பகைமையைப் பாராட்டும் ஓர் சூழலில் நாம் நற்செய்தியை எப்படி எடுத்துரைப்பது?</u>

எமது சூழ்நிலையில் நற்செய்தியை அறிவிக்க ஆவியானவர் எம்மை எப்படி அழைக்கிறார் என்பது குறித்து பல்வேறு கருத்துக்கள் உண்டு. சிலரைப் பொறுத்தமட்டில் நபர்களை மனம்மாறச்செய்து கிறிஸ்துவண்டை அழைத்து வருதலே நற்செய்திப்பணியாகும். இன்னும் சிலருக்கோ நற்செய்திப்பணி என்பது ஒடுக்கப்படுவோரோடு ஒன்றித்து கிறிஸ்தவ சாட்சியாய் இருப்பது என்பதாகும். இன்னும் பலர் பார்வையில் கடவுளின் தூதுப்பணியில் நற்செய்திப்பணி என்பது ஓரங்கம் மட்டுமே. நற்செய்திப்பணி என்பது உள்ளூர் திருச்சபை வாழ்வில் வேரூன்றியதாக, வழிபாடும் சாட்சியும் ஒருங்கிணைந்ததாக இருப்பதற்கென்று எம் எல்லோருக்குமான ஆவியானவரின் அழைப்பு என்பதை நாம் சந்தேகமின்றி உறுதிப்படுத்தலாம். (அம்சம் 85)

நற்செய்தியறிவிப்பு என்பது வார்த்தை, செயல் என்ற இரண்டையுமே உள்ளடக்க வேண்டும். நற்செய்திப்பணியையும் ஒற்றுமையையும் வேறுப்படுத்த முடியாது. ஒருவரிலொருவர் நாம் பாராட்டும் அன்பு என்பது நாம் எடுத்துரைக்கும் நற்செய்தியை செயலில் காட்டுவதொன்றாகும் (யோவான் 13: 34–35), அதேவேளை ஒற்றுமையின்மை என்பது நற்செய்திக்கு பங்கம் விளைவிக்குமொன்றாகும் (1 கொரிந்தியர் 1).

பலவேளைகளில் நற்செய்திப்பணி என்பது மனுவுருவேற்பினை மறுதலிக்குமொன்றாக நடைபெறுகிறது என்பது வருந்தத்தக்கது. கிறிஸ்துவின் வழியில் நின்று தூதுப்பணியில் ஈடுபதல் என்பது பிறரின் மாண்பையும், உரிமைகளையும், மதிப்பதாகும். கிறிஸ்து எப்படி பிறருக்கு சேவையாற்றினாரோ அதுபோலவே செயற்பட நாம்

அழைக்கப்படுகின்றோம். அந்தப் பணியில் எவ்விதமான சுரண்டலோ, ஆசைகாட்டலோ இருக்கமுடியாது.

உண்மை நற்செய்திப்பணி என்பது தாழ்மைவடிவானதும், அனைவரையும் மதிப்பதாகவும், உரையாடலில் மலர்வதொன்றாகும். பகிரங்கமாய் தனது விசுவாசத்திற்கு சாட்சி பகிர்தல் என்பது உயிருக்கு ஆபத்தானதொன்றாக அமையும் போது நற்செய்தியை வாழ்ந்து காட்டுவதே சிறந்த மாற்றுவழியாகும். (அம்சம் 89)

கலந்துரையாடவும்

அ. நாம் வாழும் நாடு நற்செய்தி அறிவிப்பதற்கு எதிர்ப்பும் பகையும் காட்டும் ஓர் சூழ்நிலை கொண்டது என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?

ஆ. இந்த பகைமை, எதிர்ப்பு பாராட்டல் எப்படி உருவாகியது?

இ. இப்படிப்பட்ட சூழலில் நாம் செய்யக்கூடியது என்ன?

ஈ. நமது அயலவர்களோடு நாம் சிநேகபூர்வமாய் நடந்து கொள்கின்றோமா?

உ. அவர்களுடன் நமது உறவை மேம்படுத்த நாம் என்ன செய்யலாம்?

ஊ. "சிநேகச் சூழல் ஒன்றிலேயே நற்செய்திப்பணி இடம்பெற முடியும்" இக் கூற்றினை ஒப்புக்கொள்கின்றீர்களா?

4. <u>நற்செய்திப்பணி, சமயங்களுக்கிடையிலான உரையாடல், மற்றும் கிறிஸ்தவ பிரசன்னம்.</u>

பன்மைத்துவமும் பன்முகத்தன்மையும் கொண்ட இன்றைய உலகில் பல்வேறு சமயங்கள், கருத்தியல்கள், நம்பிக்கைகள் கொண்ட மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். வாழ்வு தரும் ஆவியானவர் மகிழ்ச்சியையும் நிறைவையும் வாழ்வில் கொண்டுதருபவர். வாழ்வை உறுதிசெய்யும் ஆமோதிக்கும் அனைத்து கலாச்சாரத்திலும் கடவுளின் ஆவியானவரே செயற்படுகின்றார். தூய ஆவியானவரின் அறிவுக்கெட்டா செயற்பாடுகளை, ஏனைய பண்பாடுகளில் அவரின் செயற்பாடுகளை, நம்மால் முற்றாக அறிந்துகொள்ள முடியாது. வாழ்வளிக்கும் ஏனைய ஆன்மீகங்களின் ஞானம், விழுமியங்கள் என்பவற்றை நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். எனவே உண்மையான தூதுப்பணியில் 'பிறர்' உடன் பங்காளிகளேயன்றி, தூதுப்பணியின் 'வேட்டைப் பொருளாக' அவர்களை நாம் கருதக்கூடாது. (அம்சம் 93)

உரையாடல் என்பது வாழ்வை ஆமோதிக்கும், படைப்பின் ஒருங்கேற்புத் தன்மையை ஆமோதிக்கும், எமது பொது வாழ்வின் இலக்குகளை ஆமோதிக்கும், ஒரு செயற்பாடாகும். மக்களின் அவரவருக்குரிய சூழல்களில் அவர்களுடன் ஏற்கனவே இருக்கும் கடவுளின் பிரசன்னத்தை சந்திக்கும் எதிர்பார்ப்பு எம்மிடம் இருந்தால் மட்டுமே, நாம் சமய உரையாடல் என்பதில் ஈடுபடமுடியும். நாம் வருவதற்கு முன்னரே கடவுள் அங்கிருக்கின்றார் (திருத்தூதுவர் திருப்பணிகள் 17). எமது பணி எம்முடன் கடவுளை கூட்டிவருவதல்ல. மாறாக ஏற்கனவே அங்கிருக்கும் கடவுளுக்கு சாட்சிபகர்வதே. தாம் எவராயிருக்கிறார்களோ அது அனைத்தையும், சகிப்போடும் மதிப்போடும் ஒருவர் முன்பு மற்றவர் திறந்த மனதுடன், ஒருவரையொருவர் சந்தித்து ஏற்றுக்கொள்வதே, உரையாடல். (அம்சம் 94)

நற்செய்திப்பணியும் உரையாடலும் வேறுபட்டவை என்றாலும் அவை ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்டவை. திரித்துவக் கடவுளின் அறிவை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பும் பிரார்த்தனையுமாக இருந்தாலும், உரையாடலின் நோக்கம் அதுவல்ல. வாழ்வு, அதன் செயற்பாடு என்ற சூழலிலேயே உண்மை உரையாடல் இடம்பெறுகிறது. நற்செய்திப்பணி என்பது பிறருக்கு எமது ஆழ்ந்த நம்பிக்கைகளை எடுத்துரைப்பது என்பது மட்டுமல்ல, மற்றவருக்கு நாம் செவிமடுப்பதும், அவர்கள் கொண்டுதரும் அறைகூவல்களை ஏற்பதும், அவர்களால் வளமூட்டப்படுதலும் என்பதுமாகும் (திருத்தூதர் திருப்பணிகள் 10). (அம்சம் 95)

கலந்துரையாடவும்

அ. நமது நாட்டில் தூய ஆவியானவர் எப்போது செயற்பட ஆரம்பித்தார்? அவரின் செயற்பாட்டை நாம் பிறசமயங்களில் கண்டுணர முடியுமா? எங்கே?

ஆ. ஏனைய சமயங்களின் அத்திவாரத்தில் கட்டியெழுப்பப்படும் ஒன்றாக எமது நற்செய்திப்பணி அமைய முடியுமா? அந்த அத்திவாரங்கள் என்ன?

இ. பிறசமயங்களைப் பின்பற்றும் எமது அயலவரோடு நாம் சமய உரையாடலில் ஈடுபட முடியுமா? அது சம்பந்தமாக எமக்கிருக்கும் அநுபவங்கள் என்ன?

ஈ. "எமது அயலவருடன் நாம் நட்புகொண்டிருந்தால் மட்டுமே உரையாடல் என்பது இடம்பெறலாம்". அத்தகைய நட்புறவை கட்டியெழுப்ப நாம் செய்யவேண்டியது என்ன?

5. <u>எதிர்ப்பையும் பகையையும் முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலைகளில் நாம் என்ன செய்வது?</u>

தீமையை, அநீதியை நாம் எதிர்த்து நிற்கும் போது, இறைவாக்குரைக்கும் போது அதனை அடக்கவோ, எம்மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிடவோ, அச்சக்திகள் எத்தனிக்கக்கூடும். அதன் விளைவாக நாம் துன்பம், துன்புறுத்தல், மரணம் என்பவற்றைக்கூட சந்திக்க நேரலாம். உண்மையான நற்செய்திப்பணி என்பது நாம் துன்பத்திற்குள்ளாவதும், கிறிஸ்துவைப்போல் சிலுவையை சுமப்பதும், நம்மை முற்றாக தாரைவார்த்துக் கொடுப்பதுமான ஓர் செயலாகும் (பிலிப்பியர் 2: 5–11). உரோம ஆட்சியின் கீழான துன்புறுத்தலின் போது எவ்வாறு உயிர்த்தியாகிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தானதோ அதுபோலவே இன்றும், நீதிக்கும் நேர்மைக்கும் குரல்கொடுப்பது, கிறிஸ்துவுக்கான ஓர் வல்லமையான சாட்சியாய் அமையமுடியும். இயேசு தம்மைப் பின்பற்றுவோர், தம்மை மறுதலிக்க தயாராய் இருக்க வேண்டும் என்றே அழைப்புவிடுத்தார். அதுவே நித்திய மீட்பிற்கான வழி என்பதனை அவர் வலியுறுத்தினார் (மாற்கு 8: 34–38). (அம்சம் 92)

சில சந்தர்ப்பங்களில் நற்செய்திப்பணி ஊனுடலேற்பினை மறுதலிக்கும் ஓர் செயற்பாடாக நடைபெறுகிறது என்பது கவலைக்கிடமானது. அப்படியான நிகழ்வின்போது மனமாற்றம் என்பது அவசியமாகின்றது. கிறிஸ்து வழிநின்று செயற்படும் நற்செய்திப்பணி, எப்போதும் பிறரின் மாண்பினையும் உரிமைகளையும் மதித்து நடக்கும் ஒன்றாக செயற்படவேண்டும். கிறிஸ்து பிறருக்கு சேவையாற்றியது போலவே நாமும் சேவையாற்ற அழைக்கப்படுகின்றோம் (மத்தேயு 10:45, மத்தேயு 25:45). அதில் எந்தவிதமான சுரண்டலோ, ஆசைகாட்டி ஈர்ப்பதோ இடம்பெற முடியாது. அப்படிப்பட்ட நற்செய்திப்பணி ஒரு 'பொருளை' விற்பதற்கும்

வாங்குவதற்குமான ஒரு செயற்பாடாக அமைந்துவிடும். முதலாளித்துவ அமைப்பு அடிப்படையில் அமையும் கொடுக்கல் வாங்கல் நற்செய்தி என்பதனை தூய ஆவி நிராகரிக்கின்றது. அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து மனந்திரும்புதலையும் மனமாற்றத்தையும் ஆவியானவர் எம்மிடம் எதிர்பார்க்கின்றார். அதுவே அனைவருக்கும், வாழ்வின் முழுமையை அறிவிக்கும் நற்செய்திப்பணியாக அமைய முடியும். (அம்சம் 88)

கலந்துரையாடவும்

எமது சூழ்நிலை எமக்கு பாதகமான, பகைமை பாராட்டும் சூழ்நிலை என்று நினைக்கின்றீர்களா? அப்படிப்பட்ட பகைமைச் சூழ்நிலை எப்படி, எதனால் உருவானது? அதற்கு நாமே பொறுப்பாளிகளா?

6. <u>துன்புறுத்தலுக்கு நாம் முகம்கொடுப்பது எப்படி?</u>

தூதுப்பணிக்கும் நற்செய்திப்பணிக்கும், உரையாடலும் ஒத்துழைப்பும் அத்தியாவசியமானவை. உண்மை நற்செய்திப்பணி, பிறர் கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்டவர்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அவரவரின் நம்பிக்கைகள், சமயச் சுதந்திரம் என்பவற்றை மதித்து நடந்துகொள்ளும். வற்புறுத்தலினாலோ, வன்முறையாலோ, பொருள் கொடுத்தோ அல்லது அதிகாரத்தை தவறாகப் பாவித்துப் பிறரை மதம்மாறச் செய்தல் என்பது நற்செய்திக்கு முரணான செயல். உரையாடலை மேற்கொள்ளும்போது மதங்களுக்கிடையே மதிப்பையும் நம்பிக்கையையும் பேணும் உறவுகளை உருவாக்குவது அவசியம். நாம் அனைத்து மனித கலாச்சாரங்களையும் மதித்துப் போற்ற வேண்டும். நற்செய்தி ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கல்ல அது அனைத்து மக்களுக்கும் உரியது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கடவுளை எம்மோடு அழைத்துவருவதல்ல எம் பணி. ஏற்கனவே அங்கிருக்கும் கடவுளுக்கு சாட்சி பகர்தலே எம் பணி (திருத்தூதர் திருப்பணிகள் 17: 23–28). தூய ஆவியானவரின் துணையோடு நாம் கலாசார, சமய வரம்புகளைக் கடந்து, வாழ்வு தரும் பணியில் இணைந்து செயற்பட வேண்டும். (அம்சம் 110)

கலந்துரையாடவும்

அ. பௌத்தம், இந்து மதம் என்பன பற்றிய அறிவு எமக்கு முக்கியமா? அது எப்படி எமக்கு உதவலாம்?

ஆ. எமது நாட்டை என்றோ ஒரு நாள் நாம் கிறிஸ்தவமாக மாற்றுவோம் என்பதுதான் எமது நம்பிக்கையா? இல்லையென்றால் எமது இலக்கு என்ன?

7. <u>நற்செய்திப்பணியைக் கொண்டுசெல்வோர் யார்?</u>

நற்செய்திப் பணியாளர்களா?

திருப்பணியாளர்களா?

பொதுநிலையாளர்களா?

அனைவரும் சேர்ந்த திருச்சபையா?

விளிம்புகளில் வாழும் மக்கள், பாதிப்புக்குள்ளாகக்கூடிய மக்கள், தங்களை புறந்தள்ளும் சக்திகள் எவை என்பதை நன்கறிவர். தமது போராட்டத்திற்கான அவசியத்தையும் அவசரத்தையும் அவர்களால் நன்கு கிரகிக்க முடியும். வசதிபடைத்தவர்கள் விளிம்புகளில் வாழும் மக்களிடமிருந்து அவர்களின் நாளாந்தப் போராட்டங்களிலிருந்து அதிகம் கற்றுக்கொள்ள முடியும்.

திருத்தூதர் திருப்பணிகளில் காணப்படும் ஆரம்பத் திருச்சபை போன்று, கிறிஸ்துவின் பிரசன்னத்தை மையமாகக் கொண்டு ஓர் சமூகத்தை உருவாக்கும் வாய்ப்பு உள்ளூர்மட்ட திருச்சபைப் பங்குகளுக்குண்டு. அனேகர் திருச்சபையொன்றில் வரவேற்கப்படுவதோ நிராகரிக்கப்படுவதோ குறிப்பிட்ட உள்ளூர் திருச்சபைப் பங்கோடு இவர்களுக்கிருக்கும் சாதகமான அல்லது பாதகமான அநுபவத்தைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு திருச்சபை பங்கு ஒருவருக்கு முட்டுக்கட்டையாக அல்லது அவரை முற்றிலும் மாற்றும் கருவியாக செயற்படமுடியும். எனவே உள்ளூர்மட்ட திருச்சபைப் பங்குகள் எப்போதும் தூதுப்பணிக்கான தனது வாஞ்சையை புதுப்பித்துக்கொள்ளல் அவசியமாகின்றது. உள்ளூர்மட்ட திருச்சபைப் பங்குகளே தூதுப்பணியின் முன்னிலை, முதன்மை முகவர்கள். மாற்றம்

கொண்டுதரும் ஆன்மீகம், தூதுப்பணி என்பதில் வழிபாடும் திருவருட்சாதனங்களும் வகிக்கும் பங்கு, மிக முக்கியமானது. திருமறையை சூழலோடிணைத்து வாசிப்பது என்பது குறிப்பிட்ட உள்ளூர்மட்ட திருச்சபைப் பங்கு, கடவுளின் நீதிக்கும் அன்பிற்கும் சாட்சி பகர்வதற்கு மூலவளமாக அமையும். திருப்பீடத்தில் இடம்பெறும் வழிபாடு சமூகத்தின் அன்றாட வாழ்வோடு இணையும் போதுதான் அது உண்மைத்துவமானதாய் மாறுகின்றது. எனவே உள்ளூர்மட்ட திருச்சபைப் பங்குகள் தமது சொகுசு வலையங்களிலிருந்து வெளிவந்து கடவுளின் தூதுப்பணிக்காய் எல்லைகளைத் தாண்டத் துணியவேண்டும்.

8. நாம் பிரசங்கிக்க வேண்டியது எவ்வாறு?

உண்மைத்துவமான சாட்சி பகர்தல் என்பது நாம் நமது தூதுப்பணியில் என்ன செய்கிறோம் என்பது மட்டும் அல்ல, அத்தூதுப்பணியை நாம் எப்படி வாழ்ந்து காட்டுகின்றோம் என்பதைப் பொறுத்தது. தூதுப்பணியில் ஈடுபடும் திருச்சபை, திரித்துவ அன்பின் கூட்டுறவில் வேரூன்றிய ஆன்மீகத்தில் ஊட்டம்பெற வேண்டியதொன்றாகும். ஆன்மீகமே எமது வாழ்விற்கு ஆழ்ந்த அர்த்தத்தைத் தருகின்றது. வாழ்வுப் பயணத்தை தூண்டுவதும், உந்துவதும், அதற்கு உயிரோட்டம் கொடுப்பதுவும் அதுவே. அச்சக்தி வாழ்விற்கு எதிராக செயற்படும் அனைத்து சக்திகளையும், அதிகாரங்களையும், முழுமை வாழ்வினை மறுக்கும், நாசமாக்கும், குறைக்கும் எந்த சக்திகளையும் எதிர்த்து நிற்கும். (அம்சம் 29)

கலந்துரையாடவும்

“வார்த்தை, செயல், வாழ்வுப் பாங்கு மூலமே நாம் பிரசங்கிக்க வேண்டும்”. - நடைமுறையில் இதன் அர்த்தம் என்ன?

9. <u>நாம் பிரசங்கிக்க வேண்டியது இயேசுவையா அல்லது திரித்துவத்தையா?</u>

திரியேகக் கடவுளான படைப்பாளரை, மீட்பரை, வாழ்வின் காப்பாளரை நாம் விசுவாசிக்கின்றோம். கடவுள் தமது இல்லமாம் இந்த முழு உலகையும் தமது சாயலில் உருவாக்கி அதன் வாழ்வினைக் காக்கவென்று எப்போதும் செயற்படுகின்றார். உலகின் வாழ்வாம் இயேசு கிறிஸ்துவை நாம் விசுவாசிக்கின்றோம். இந்த உலகிற்கான கடவுளின் ஊனுடல் வடிவம் அவரே (யோவான் 3:16). வாழ்வின் முழுமையைக் காப்பதே இயேசு கிறிஸ்துவின் முடிவான கரிசனையும், தூதுப்பணியுமாகும் (யோவான் 10:10).

வாழ்வைத் தருபவரும், காப்பவருமான கடவுளாம் தூய ஆவியானவரை நாம் விசுவாசிக்கின்றோம். அவரே படைப்பிற்கு சக்தி தருபவரும் அப்படைப்பினை புதுப்பிக்கின்றவரும் (தொடக்க நூல் 2:7; யோவான் 3:8).

வாழ்வை மறுப்பது என்பது வாழ்வின் கடவுளை நிராகரிப்பது. திரித்துவக் கடவுளின் வாழ்வுகொணரும் தூதுப்பணிக்கு நாம் அழைக்கப்படுகின்றோம். புதிய வானமும் புதிய பூமியும் அனைவருக்கும் தரும் அந்த நிறைவான வாழ்வுபற்றிய தரிசனத்திற்கு சாட்சி பகர நம்மைப் பலப்படுத்துகின்றவரும் அவரே. இன்று அவரின் தூதுப்பணியில் இணைந்துகொள்ள கடவுளின் வாழ்வுதரும் இச் செயற்பாட்டை நாம் எப்படி? எங்கே கண்டுணர்கின்றோம்.

கலந்துரையாடவும்

கடவுளாம் தந்தையை பிரசங்கிப்பது என்பதன் அர்த்தம் என்ன?

அவர் படைப்பாளரும் வரலாற்றின் ஆண்டவருமாவார். முழுப்படைப்பும் அந்த ஒப்புரவிற்குள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றது என்பதனை நாம் பல வேளைகளிலும் மறந்துவிடுகின்றோம் (2 கொரிந்தியர் 5: 18–19). இந்த உலகம் புறக்கணிக்கப்பட்டு ஆன்மா மட்டுமே மீட்கப்படும் என்பதை, நாம் விசுவாசிப்பதில்லை. இந்த பூமியும் எங்கள் உடலும் இரண்டுமே அவரின் அருளால் மீட்கப்படும் என்பதையே நாம் விசுவாசிக்கின்றோம். அதனையே ஏசாயா, யோவான் என்போர் புதிய வானமும் புதிய பூமியும் உருவாகும் என்று சாட்சி பகர்கின்றனர் (ஏசாயா 11: 1–9; 25: 6–10; 66:22; திருவெளிப்பாடு 21: 1–4). (அம்சம் 20).

கடவுளின் தூதுப்பணி, அவர் வரலாற்றிலும், படைப்பிலும் கண்கூடான சத்தியமாய்; காலத்திற்குள்ளும், சூழ்நிலைக்குள்ளும், சந்தர்ப்பங்களுக்குள்ளும், செயற்படுகின்றவர் என்பதனையே பறைசாற்றுகின்றது.

கடவுளாம் மைந்தன்?
நீதி, அமைதி, ஒப்புரவு என்பதன் மூலம் உலகிற்கு முழுமை வாழ்வு அருள்பவர்.

கடவுளாம் தூய ஆவியானவர்?
ஒழுங்கின்மையிலிருந்து ஒழுங்கை உருவாக்குபவர்
வாழ்வுதரும் ஆண்டவர் அவரே
திருச்சபையை பலப்படுத்துபவரும் இயங்கவைப்பவரும் அவரே

தூய ஆவியானவர் ஞானத்தின் ஆவியானவர் (ஏசாயா 11:3; எபேசியர் 1:17)
அனைத்து சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துபவர் (யோவான் 16:13)

மனித கலாசாரத்துக்கும், ஆக்கபூர்வ செயற்பாட்டிற்கும் உந்துதல் சக்தி ஆவியானவரே. எனவே அனைத்து கலாசாரங்களிலும், சூழ்நிலைகளிலும் முழுமை வாழ்வைக் கொண்டுவரும் அவரின் ஞானத்தை நாம் மதிப்பதுவும், அவரோடு ஒத்துழைப்பதுவும் எமது தூதுப்பணியின் ஓரங்கமாகும்.

காலணித்துவ செயற்பாட்டோடு சம்பந்தப்பட்ட தூதுப்பணி, கலாச்சாரங்களை அவமதித்து, உள்ளூர் மக்களின் ஞானத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தது என்பது, நாம் துக்கப்பட வேண்டியதொன்றாகும்.

வாழ்வை ஆமோதிக்கும் உள்ளூர் மக்களின் ஞானமும் கலாசாரமும், ஆவியானவர் அருளும் கொடை. இறையியலாலர்களும், விஞ்ஞானிகளும் புறக்கணித்த, கேலிசெய்த அந்த மக்களின் ஞானமே? படைப்பில் செயலாற்றும் ஆவியானவரின் வாழ்வு தரும் செயலோடு நாம் இணைந்துகொள்ள, எமக்கு இன்றியமையாத புதிய பார்வைதரும் ஒன்றாக செயற்படுகின்றது. படைப்பில் கடவுள் வெளிப்படுவதை அவர்களே நமக்கு உணர்த்தி நிற்கின்றார்கள்.

ஆவியானவர் எம்முடனிருக்கிறார் என்று நாம் மார்தட்டுவதில் அர்த்தமில்லை. நாம் வாழ்கின்ற வாழ்வில் மற்றவர்கள் அதனைக் காணவேண்டும். இதனையே பவுலடியார் ஆவியின் கனிகளாம் அன்பு, மகிழ்ச்சி, அமைதி, இரக்கம், பரிவு, கீழ்ப்படிவு, தன்னடக்கம் (கலாத்தியர் 5:23) என்பவற்றை பிறர் உங்கள் வாழ்வில் காணட்டும் என்கின்றார். அதுவே பிறர் எம்மில் செயற்படும் ஆவியானவரைக் கண்டுகொள்வதற்கான ஒரே வழியாகும்.

திருமறைப் படிப்புகள்

1. 5000 நபர்களுக்கு உணவளித்தல் - வாழ்வின் அப்பம்
2. எருசலேம் மாநாடு – அடிப்படைகளைப் பற்றிக்கொள்ளுங்கள்
3. மத்தேயு 24 – உலகெங்கும் சீடர்களை உருவாக்குதல்
4. மரியாளின் பாடல் - லூக்கா 4: 16–30
5. அத்தேனே நகரில் பவுலடியார் – அறியப்படாத கடவுள்
6. கொர்நேலியுவும் பேதுருவும் - திருத்தூதர் திருப்பணிகள் 10: 1–48